# பத்திரிக்கை செய்தி

## வீட்டு உபயோக மின் இணைப்பை வணிக பயன்பாட்டிற்கான மின் இணைப்பாக மாற்றம் செய்ய லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய உதவி பொறியாளருக்கு 1 ஆண்டு கடுங்காவல் சிறை

புகார்தாரர் திருமதி.தனபாக்கியம், மணியக்காரம்பாளையம், கோயமுத்தூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய இடத்தில் ஒரு கடை கட்டி வீட்டு உபயோக மின் இணைப்பில் வாடகைக்கு விட்டுள்ளார். மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகத்திலிருந்து சோதனை செய்தபோது புகார்தாரரிடம் உடனடியாக மின் இணைப்பை வணிக மின் இணைப்பாக மாற்றக்கோரியும், மற்றும் மின் இணைப்பை துண்டித்துள்ளனர். புகார்தாரர் உடனடியாக வணிக பயன்பாட்டிற்கான மின் இணைப்பு வேண்டி உதவி பொறியாளர் அலுவலகம், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம், சின்னவேடம்பட்டி அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டத்தில் விண்ணப்பித்துள்ளார். திரு.துரைராஜீ, உதவி மின் பொறியாளர், உதவி பொறியாளர் அலுவலகம், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மாண கழகம், சின்னவேடம்பட்டி அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம் அவர்கள் மின் இணைப்பை வணிக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்து தர தனக்கு ரூ.300/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கோயமுத்தூர் பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 21.08.2009 மேற்கொள்ளப்பட்டு திரு.துரைராஜீ, ,கார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.300/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், கோயமுத்தூர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 18.03.2025 அன்று திரு.துரைராஜீ, முன்னாள் உதவி பொறியாளருக்கு 1 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.1,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.